சென்னை முதன்மைக் கல்வி அலவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.2625 /ஈ3/2022-3 நாள்.09.04.2022

-----

பொருள்: குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2022-2023 ஆம் கல்வியாண்டில் அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவுநிலை வகுப்பில் (LKG/I Std) குறைந்தபட்சம் 25% ,இட ஒதுக்கீடு வழங்குதல் - சேர்க்கை நடைமுறைகள் குறித்து மேற்கொள்ளப்படவேண்டிய விவரங்கள் - தொடர்பாக

பார்வை: சென்னை-06, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1476/இ1/2022 நாள்.06.04.2022.

---------

பார்வையில் காணும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறையினில் தெரிவித்துள்ள அறிவுரைகளைத் தொடர்ந்து பின்வரும் விவரங்களை உறுதி செய்து அறிக்கை சமர்பித்திட வட்டார வளமையத்தில் RTE பணியிணை மேற்கொள்ளும் ஆசிரியர் பயிற்றுநர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

1. பள்ளிகள் செயல்பட்டு வரும் முகவரி தொடர்பான Location குறித்து latitude and Longitude விவரங்களை சரி பார்த்து சரியாக உள்ளதை 11.04.2022 க்குள் உறுதி செய்து, தங்கள் வட்டார வளமைய கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் RTE வரம்பிற்குள் வரும் பள்ளிகள் சார்பான விவரங்களை மெட்ரிகுலேசன் பள்ளிகள் சார்பாக தனியாகவும் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் சார்பில் தனியாகவும் அறிக்கை சமர்பித்திட அறிவுறுத்தப்படுகிறது.

2. அவற்றில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், அதன் விவரங்களை மாவட்ட ஒருங்கிணைப்பாளரிடம் (RTE) உரிய ஆதார ஆவணங்களுடன் நேரில் சமர்பித்து அவற்றினை சரிசெய்திட உரிய தொடர் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

3. மேலும் RTE சார்பான தொடர் பணியில் தங்களது முழு ஒத்துழைப்பினை வழங்கிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

08.4.22

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

08/04/22

பெறுநர்

1. ஆசிரியர் பயிற்றுநர்கள் (RTE)

அனைத்து வட்டார வளமையங்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. உதவித் திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை மாவட்டம்.
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், சென்னை மாவட்டம்.